நல்லூர் ... நூலகம்
மாநகர ... ன்றம்
யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு | விலை ரூபா 5.00

மாசு 06 ஒலி 103 பிரசோற்பத்தி மாசி 26 (09. 03 1992) திங்கள்


## ★ தமிழீழ மாநாடு நடத்தச் சென்ற நெடுமாறன் உட்பட 70 பேர் தமிழகத்தில் கைது

தமிழீழ மாநாட்டை நடத்த நேற்று ஊர்வலமாக சென்ற எழுபது பேர் சென்னை எழும்பூரில் வைத்து தமிழக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர், கைதானவர்களில் ஒருவர் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் நெடுமாறனும் ஆவார் இம்மாநாட்டை நடத்த கடந்த வியாழனன்றே பொலிஸார் தடைவிதித்திருந்ததாகவும் மாநாட்டை நடத்த அரசிடம் அனுமதி கோரவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர், இந்நிலையில் மாநாட்டை நடத்த நேற்று ஊர்வலமாக சென்றபோது அனைவரும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதாகினர்,

# கோண்டாவிலில் குண்டு வீச்சு

# ஐந்து வீடுகள் சேதம்; இருவர் காயம்

## பல லட்சம் ரூபா பெறுமதியான விவசாயப் பொருள்களும் நாசம்

நீண்ட நாள்களின் பின்னர் நேற்றுக்காலை இரு குண்டு வீச்சு விமானங்கள் யாழ் குடாநாட்டில் குண்டு வீச்சுத்தாக்குதலை நடத்தின

கோண்டாவில் வடக்குப்பகுதியில் இடம்பெற்ற குண்டுவீச்சில இரு பொதுமக்கள் படுகாயமடைந்தனர், ஐந்து வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுக்காலை 10 மணியளவில் கோண்டாவில் பகுதியில் ஹெலிக்கொப்டர் ஒன்று வட்டமிட்டுச் சென்றதைத் தொடர்ந்து இரு குண்டுவீச்சு விமானங்கள் அப்பகுதிக்கு வந்தன,

கோண்டாவில் வடக்குப் பகுதியாகி திலீபன்வீதியில் உள்ள இரு பொதுமக்கள் வீடுகள் மீது குண்டுகள் வீசப்பட்டன

வீசப்பட்ட நான்கு குண்டுகளில் இரண்டு அருகிலுள்ள தோட்டப்பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

குண்டுவீச்சினால் மாணிக்கம் இரத்தினம் (47 உரும்பிராய்), இளையதம்பி அமிர்தலிங்கம் (35 கோப்பாய்) ஆகியோர் படுகாயமடைந்தனர்

... 04 ஆம் பக்கம் பார்க்க

பி. பி. ஸி. செய்தியாளர் தகவல்

## பலாலி முகாம் எல்லையை விஸ்தரிப்பதே படையினர் நோக்கம்

இம்மாத நடுப்பகுதிக்குப் பின்னர் குடாநாட்டில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கலாம் என இராணுவ வட்டாரங்கள் எண்ணியுள்ளன ஆனால் குடா நாட்டில் இராணுவம் காலை வைத்த பின்னரே புலிகளின் எதிர்ப்பின் கடுமையை படையினர் புரிந்து கொள்வர் இவ்வாறு பி பி ஸி. கொழும்பு செய்தியாளர் கூறுகிறார்

குடா நாட்டிலுள்ள பலாலி முகாமின் எல்லையை சிறிது சிறிதாக விஸ்தரித்து வடமராட்சி வரை தமது பாதுகாப்பு அரணை அமைப்பதே படையினர் நோக்கமாக இருக்கிறது இதன் மூலம் புலிகளின் கடல் போக்குவரத்தையும் துண்டிக்கலாம் என இராணுவம் கருதுகின்றது.

ஆனால் இவை நடைமுறை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கல்முனையில் சைக்கிள் குண்டு 3 எஸ்.ரி.எப் படையினர் காயம்

மட்டக்களப்பு கல்முனை சந்தையில் சைக்கிள் குண்டு ஒன்று வெடித்ததில இரு அதிகாரிகள் உட்பட 3 விசேட அதிரடிப்படையினர் படுகாயமடைந்தனர்

சைக்கிளில் ஒரு சாக்குப்பையினுள் நேரம் கணித்து இக்குண்டு வைக்கப்பட்டதாக கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்தது.

சந்தைப்பகுதியில் சைக்கிள் ஒன்று அநாதரவாக நிற்பதை அங்குள்ளவர்கள் விசேட அதிரடிப்படையினருக்கு அறிவித்தனர்.

அதிரடிப்படையினர் அப்பகுதியை நெருங்கியதும் குண்டு வெடித்ததில் 3 அதிரடிப் படையினரும் படுகாயமடைந்தனர்

## சிங்களக் குடியேற்ற விவகாரம் அரச அதிபர் பதவியை பறித்தது!

வவுனியா அரச அதிபர் அண்மையில் பதவியை இழந்தமைக்குக் காரணம் வவுனியாவில் சிங்களக் குடியேற்றம் தொடர்பாக அவருக்கும் வவுனியாவைச்சேர்ந்த அமைச்சர் ஒருவருக்கும் இடையிலான இழுபறியே காரணம் என வவுனியாச் செய்திகள் தெரி

— 04 ஆம் பக்கம் பார்க்க

சிப்பாய் சடலம் உட்பட

## நேற்று மேலும் சில ஆயுதங்கள் மீட்பு!

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடுப் பகுதியில் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையே கடந்த வியாழக்கிழமை மோதல் நடைபெற்ற இடத்தில் மேலும் ஒரு ஸ்ரீலங்கா இராணுவ சிப்பாயின் சடலமும் ஆயுதங்களும் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன,

—04 ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன்துறைக்கு இன்றும் பத்து லொறிகள் செல்லும்

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்துக்கு நேற்று முன்தினம் பரீட்சார்த்தமாக லொறிகள் சென்று பொருள்களைஎடுத்து வந்ததைபடுத்து இன்று திங்கட்கிழமையும் காலை 8 மணியளவில் பத்து லொறிகள் அங்கு செல்லவுள்ளன:

இன்றிலிருந்து தொடர்ந்து தினமும் பத்து லொறிகள் அங்கு சென்று உணவுப் பொருள்களை ஏற்றிவர ஏற்பாடாகியுள்ளது 07, 47

தடைப்பட்ட 3 ஆண்டுகளுக்கான

## தொழில் நுட்பக்கல்லூரி பரீட்சை அடுத்த வாரம் ஆரம்பம்

தடைப்பட்ட 89. 90, 91 ஆம் ஆண்டுகளுக்கான யாழ் தொழில் நுட்பக்கல்லூரியின் பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகிறது

இதற்கான அனுமதி அட்டைகளும் காகிதாதிகளும் விசேட கப்பலில் நேற்று வந்து சேர்ந்துள்ளன,

முதற்கட்டமாக 16 ஆம் திகதி சுருக்கெழுத்து, தேசிய வர்த்தக தராதர பத்திரப் பரீட்சைகள் ஆரம்பமாகும் என தொழில் நுட்பக்கல்லூரியின் அதிபர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாநாட்டில் பிரதித்தலைவர் மகேந்திரராசா

# தேசிய விடுதலைக்கு உழைக்கும் பெண்கள் பெண் விடுதலையையும் சிந்திக்க வேண்டும்

"இந்திய துணைக்கண்டத்தின் விடுதலைக்காக ஆயிரக்கணக்கான பெண்கள் ஆயுதம் ஏந்தியும் அமைதி முறையிலும் போராடினார்கள் உயிரைக் கொடுத்தார்கள்.

ஆனால் விடுதலையடைந்த இந்திய துணைக்கண்டத்தில் பெண் ஒடுக்கு முறை இன்றும் உச்சக்கட்டத்தில கோரத்தாண்டவமாடுகிறது. இந்திய துணைக்கண்டத்தில் தேசிய விடுதலைக்காக உழைத்த பெண்கள் பெண்விடுதலைக்காக சிந்திக்காததன் விளைவே இந்நிலைக்கு காரணம்

இவ்வாறு விடுதலைப் புலிகளின் பிரதித்தலைவர் கோ, மகேந்திரராசா (மாத்தையா) கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழீழ பெண்கள் மாநாட்டில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டினார்:

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

உலகளாவிய ரீதியிலே அரைப்பங்கினரான பெண்கள் நீண்டகாலமாக அடக்கப்பட்டு- ஒடுக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் அவர்களில் பலர் இன்று விழிப்புணர்வு பெற்று - தனது உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமென்பதற்காகவும். ஆண்களுக்கு நிகராக மதிப்புடனும், பெருமையுடனும் வாழ வேண்டும் என்பதற்காகவும் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அரசியல், பொருளாதாரம் சமூக நிலை போன்ற அனைத்துத் துறைகளின் மேம்பாட்டுக்காகவும் பெண்ணினம் தனது பங்களிப்பை இன்று செலுத்துகிறது இதற்கான அரசியல் சமூக உரிமைகளை நிலை நிறுத்துவதற்கான போராட்டங்கள் கடந்த நூற்றாண்டிலே எழிச்சி பெற்று விட்டது. பெரும்பாலான நாடுகளிலே இன்று பெண்கள் அரசியலில் ஈடுபடும் - தேர்தலில் பங்கு பெறும் உரிமையை வென்றெடுத்துள்ளனர்.

பெண்கள் எத்தகைய அடக்குமுறைக்கு உள்ளாகிக் கொண்டிரு கிறார்கள் எந்தெந்த உரிமைகளை இழந்திருக்கிறார்கள்? பெண்ணுரிமைகளைப் பறித்து- பெண்களை அடக்குமுறைக்குள்ளாக்கி இருப்பவர்கள் யார்? இவர்களுக்கு துணைபோகின்ற சக்தி

—04 ஆம் பக்கம் பார்க்க

# ராமானுஜம் கப்பல் சேவை வெள்ளியுடன் நிறுத்தம்

தலைமன்னாருக்கான "ராமானுஜம்" கப்பல் எதிர்வரும் வெள்ளிக்கிழமையுடன் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார்த் தீவு அகதிகளை ஏற்றிவரும் தலைமன்னார், ராமேஸ்வரம் "ராமானுஜம்" கப்பல் சேவை இன்னும் இரண்டு சேவைகளோடு இடை நிறுத்தப்பட்டுவிடும் என்றும் இன்று திங்கட்கிழமையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் இரு சேவைகள் நடைபெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார்த் தீவைச் சேர்ந்த மொத்தம் 954 பேர் இரு சேவைகள் மூலம் தலைமன்னார் வந்தடைய இருப்பதாக இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ஜப்பான் சமாதான மன்றத்தின்

# ஆரியரத்னவுக்கான பரிசளிப்பு இல. தூதுவர் பகிஷ்கரிப்பு?

சர்வோதய இயக்கத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்னாவுக்கு ஜப்பானிய நிவானோ சமாதான மன்றத்தின் பரிசு வழங்கும் வைபவத்தில் ஜப்பானில் உள்ள இலங்கைத் தூதுவர் சி. ம. மகேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ள முடியாதிருப்பதாக மன்றத்தின் செயலாளர் நாயகத்திடம் அறிவித்துள்ளாராம்.

எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இவ் வைபவத்திற்குத் தான் அழைக்கப்பட்டதாகவும் ஆனால் அந்த அழைப்பை தான் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் தூதுவர் மகேந்திரன் அறிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிக்கை தெரிவித்துள்ளது.

சர்வோதய இயக்கம் உட்பட இலங்கையிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கையை விசாரணை செய்ய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பதால் தான் கலந்து கொள்ள முடியாதிருப்பதாக அவர் காரணம் காட்டியுள்ளாராம்.

இலங்கை அரசியல் நடவடிக்கைகளில் தான் ஈடுபடப்போவதாக கலாநிதி ஆரியரத்ன அண்மையில் பகிரங்கமாக அறிவித்திருந்தமையும் இதற்கான மற்றொரு காரணமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளாராம்.

66 இலட்சம் ரூபா கொண்ட இச் சமாதானப் பரிசை ஆரியரத்ன பெறவிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (06)

# மாணவர் நலன் கருதி ஜெனரேட்டர் வசதி

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தால் யாழ் கிளைக்கு வழங்கப்பட்ட ஜெனரேட்டர்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிளைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஜெனரேட்டர் மானிப்பாய் பகுதி மாணவர்கள் இரவில் கூட்டுப்படிப்பை மேற்கொள்வதற்காக மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளதாக பிரிவுக்கிளைத்தலைவர் எஸ். குருவரன் தெரிவித்துள்ளார்.

தினமும் மாலை ஆறுமணி தொடக்கம் இரவு 9 மணி வரை இந்த ஜெனரேட்டர் மூலம் மின் விநியோகம் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (06)

# யாழ். இளம் பெண் கொழும்பில் தற்கொலை

கணவனுடன் ஏற்பட்டதாகக் கூறப்படும் தகராறு காரணமாக இளம் பெண் ஒருவர் கடலில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் பம்பலப்பிட்டியில் இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரஷாதா இளம்பெண் பம்பலப்பிட்டியில் வசித்து வந்தார் என்றும், கனடாவில் இருந்து அண்மையில் நாடு திரும்பிய இளைஞர் ஒருவரை மூன்று வாரங்களுக்கு முன் திருமணம் செய்தார் என்றும் கூறப்படுகிறது.

சிநேகிதி ஒருவரைப்பார்த்து வரச் செல்வதாகக்கூறி வீட்டிலிருந்து வெளியேறியவர் கடற்கரைக்குச் சென்று கடலில் குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (06)

# காடு தீக்கிரை; வேட்டை நோக்கிலான செயல்!

நுவரேலியாவில் கடந்த சில தினங்களுக்கு முன் 72ஏக்கர் காடு தீக்கிரையான சம்பவம் தொடர்பாக புலன் விசாரணை நடத்திய பொலிசார் மிருகவேட்டைக்காகவும், விறகு வெட்டுவதற்காகவுமே இச் செயல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பாதிப்பு

அம்பாறை மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளால் 45 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (06)

## கலந்துரையாடல்

வலிகாமம் பிரிவு உற்பத்திக் குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள், உறுப்பினர்கள் அனைவரும் இன்று திங்கட்கிழமை காலை 10மணிக்கு சுன்னாகம் நாகம்மாள் திரையரங்கில் நடைபெறவுள்ள கலந்துரையாடல் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் கோரியுள்ளது.

# அசர்பைஜான்- ஆர்மேனியா; ஈரான் துரித சமரஸ முயற்சி

அசர்பைஜானுக்கும், ஆர்மேனியாவுக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்யும் முயற்சியில் ஈரானும், ரஷ்யாவும் இணைந்துள்ளன.

குறிப்பிட்ட பகுதியில் இரத்தக்களரியை நிறுத்துவதில் ரஷ்யாவுடன் புதிய மத்தியஸ்த முயற்சிகளை ஈரான் மேற்கொள்ளும் என்று நேற்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

மேற்படி மூன்று நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களைக் கொண்ட கூட்டம் ஒன்றிற்கு ஈரான் திட்டமிட்டுள்ளது.

போர்நிறுத்தம் ஒன்றினை மேற்கொள்ளும் பொருட்டு ஈரானியப் பிரதிநிதிகள் அசர்பைஜானுக்கும், ஆர்மேனியாவுக்கும் மீண்டும் செல்வர் என்றும் ஈரானின் வெளியுறவு அமைச்சர் அக்பர்-வெலாயத்தி கூறியுள்ளார்.

# நாகதம்பிரான் பொங்கல்விழா

சரித்திரப் பிரசித்தி பெற்ற புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவப் பொங்கல் விழா நடத்துவதற்கான ஏற்பாடுகளைத் திருப்பணிச் சபையும், தர்மகர்த்தா சபையும்மேற்கொண்டுள்ளன.

18 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பித்து 19 ஆம் திகதி வியாழ கிழமை காலைவரை இவ்விழா நடைபெறும். (17)

# 'நாதஸ்வரக் கலை மேலும் சிறக்க ஒத்துழைப்புத் தேவை'

சங்கீதம், நடனம், வீணை முதலான கலைத்துறை ஆற்றல்களை மேம்படுத்துவதற்கும் அவற்றில் தகுதி காண்பதற்கும் இசைக்கல்லூரி எவ்வாறு பயன்படுகிறதோ அதே போன்ற நாதஸ்வரம் தவில் போன்ற இசைக் கலைகள் பயிலவும், அவற்றின் சிறப்புகளை மேலோங்கச் செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கவும் கல்வித்துறை நிபுணர்களும், அதிகாரிகளும் முன்வரவேண்டும் என்று கீரிமலை சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

இரு முது பெரும் நாதஸ்வர மேதைகளான மாவிட்டபுரம் எஸ். கே. இராசா, யாழ்ப்பாணம் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை ஆகியோருக்கு இணுவிலில் நடத்தப்பட்ட பாராட்டு விழாவிலேயே அவர் இக் கோரிக்கை விடுத்தார்.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயக் கல்யாண மண்டபத்தில் சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது.

தலைமையுரையில் திரு சுந்தரலிங்கம் இசைக் கலைக் குடும்பத்தைச் சேர்ந்தோர் தமது சக கலைஞர்களுக்கு அதுவும் தமது குருமேதைகளுக்கு பாராட்டு விழா எடுப்பது பெருமை தரக்கூடியது. பரம்பரை வழித் தோன்றல்கள் நாதஸ்வரக் கலை வல்லுநராக வளர்வதற்கு இன்றைய தலைமுறையினர் ஆக்க உதவி புரிய வேண்டும். அதன் மூலம் இசைக் கலை வளர்ச்சி பெறும் என்றார்.

நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குகையில் கலைஞர்கள் வாழும் போதே அவர்களைப் பாராட்டுவது வரவேற்கத்தக்கது. வருங்காலச் சந்ததிக்கு எடுத்துக்காட்டானது என்றார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரை ஆற்றுகையில், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான நிர்வாகத்தின்கீழ் 1984 இல் ஆரம்பிக்கப்பட்ட நாதஸ்வரப் பாடசாலை போர்க்கால நிலைமை காரணமாக நடத்த முடியாமலுள்ளது என்றார். மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர்.

# 'பண்பட்ட வாழ்க்கைக்கு சமயம் உறுதுணை புரியும்'

"சமயம் என்பதுமக்களைப் பயன்படுத்தி நேரிய வாழ்வு வாழ வழிகாட்டும் ஒரு தூய மார்க்கமாகும் நாட்டின் நலத்தைப் பேணுவதே சமய வாழ்வின் நோக்கமாகும் இந் நிலையை எமது மக்கள் உணர்ந்து வழிபாட்டில் ஈடுபட வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இப் பாதயாத்திரையை ஆரம்பித்துள்ளோம் எமது வாழ்வே இறைவனை நோக்கிச் செல்லும் யாத்திரையாகும். எமது வாழ்வு சிறக்கவும் இன்றைய துன்பங்களில் இருந்து சுபிட்சம் பெறவும் வழிபாடு துணை புரியும்"

இவ்வாறு கொழும்புத்துறை மேற்கு நோக்கி நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட பாதயாத்திரை நிகழ்ச்சியில் ஆத்மஜோதி நா முத்தையா உரையாற்றுகையில் கூறினார். (47)

# ★ உலகவலம் ★

## மேற்கு ஜேர்மனி

டெனோ கார்ட் 700 என்ற ஒலிப்பதிவுக் கருவியைக் கண்டுபிடித்துள்ளார்கள். உருவத்தில் ஒரு பென்சிலை விடச் சிறியதாக உள்ள இக்கருவியின் எடை 108 கிராம் மாத்திரமே. உலகிலேயே மிகச் சிறிய ஒலிப்பதிவுக் கருவி இது என்று தெரிவிக்கப்படுகிறது. மேற்கு ஜேர்மனியிலுள்ள மியூனிச் நகர நிறுவனம் தயாரித்துள்ள இக்கருவியில் ஒருமுறை பதிவு செய்த விஷயங்களை 250 முழுப் பக்கங்களில் எழுத முடியும் என்று கூறப்படுகிறது.

## பிரிட்டன்

செயற்கைக் கோள்களை எடுத்துச் சென்று செலுத்திவிட்டுத் தானாகவே பூமியை வந்தடையக் கூடிய விண்வெளி விமானம் ஒன்றை பிரிட்டன் தயாரித்துள்ளது ராக்கெட்டுகளும், சலஞ்சர்களும், விண்வெளி ஓடங்களும் எப்பொழுதும் செங்குத்தாகவே பூமியில் இருந்து எழும்பும. ஆனால் இந்த விமானம் மற்றைய விமானங்கள் போலவே மேல் நோக்கி எழுந்து செல்லக்கூடியது ஆலன்பாண்ட் என்றழைக்கப்படும் இந்த நவீன விமானத்தை அமைக்க ஆறு பில்லியன் பவுண்ட் செலவாகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

## அமெரிக்கா

உலகில் மிகப் பெரிய பணக்கார நாடாகவும், தொழில் வளம் மிக்க நாடாகவும் கருதப்படும் அமெரிக்காவிலேயே ஒரு கோடியே எழு த்திமூன்று லட்சம் பேர்கள் உத்தியோகம் அற்றவர்களாகத் திண்டாடுகிறார்கள் ஆனால் இவர்களுக்கு கிழமை ஒன்றுக்கு 120 டொலர்கள், இலங்கை நாணயப்படி 4 ஆயிரத்து எண்ணூறு ருபாவை வாழ்க்கைச் செலவிற்காக அமெரிக்க அரசு வழங்கி வருகிறது.

□ □ □

இருதய நோயாளிகளுக்கு உயிர் காப்பாளனாக மருத்துவமனைகளில் பயன்படுத்தப்பட்டுவரும் டெபிபிரிலேட்டர் என்ற கருவி சீரற்ற இருதயத் துடிப்பைச் சீராக்கி விடுகிறது. நின்றுவிட்ட இருதயத் துடிப்பை மீண்டும் இயங்கச் செய்கிறது.

ஆனால் இக்கருவி மிகப் பெரியதும், கனமானதுமாய் இருப்பதினால் அவசர உதவிக்கு இதை எடுத்துச் செல்வதில் பெரும் சிரமமாக இருந்தது. இந்தச் சிரமத்தைத் தவிர்க்க இப்போது சிறிய டிரான்சிஸ்டர் அளவேயுள்ள டெபிபிரில்லேற்றர் என்ற கருவியை நியூயோர்க்கில் தயாரித்திருக்கிறார்கள்.

இக்கருவி அதிக எடை இல்லாததால் இதை எங்கும் காரிலோ, வானிலோ துரிதமாக எடுத்துச் செல்ல முடியும் மேலும் இது பற்றரியில் இயங்குவதினால் தேவைப்படும் போது றீசார்ஜ் செய்து கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது. (16)

# கடந்த 4 தொடர்களில் அதிக ஓட்டம் பெற்றவர்கள்

கடந்த 4 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளிலும் ஆகக் கூடுதலான ஓட்டங்களை ஒரு ஆட்டத்தில் பெற்ற வீரர்கள் விவரத்தை இங்கு தருகின்றோம்.

| ஓட்டம் | பெயர் | போட்டி | ஆண்டு |
|---|---|---|---|
| 181 | ஐ வீ. ஏ. றிச்சட் | மே. இந்தியா எதிர் இலங்கை | 1987 |
| 175 | கபில் தேவ் | இந்தியா எதிர்சிம்பட்வே | 1983 |
| 171 | ஜீ. எம். ரேணர் | நியூசிலாந்து எதிர் தென்ஆபிரிக்கா | 1975 |
| 141 | டி எல்- க்ரோன | சிம்பட்வே எதிர் நியூசிலாந்து | 1987 |
| 138 | ஐ-வீ-ஏ- றிச்சாட்ஸ | மே. இந்தியா எதிர் இங்கிலாந்து | 1979 |
| 137 | டி- எல். அமிஸ | இங்கிலாந்து எதிர் இந்தியா | 1975 |
| 131 | கே- டபிள்யு ஆர். பிளெச்சர் | இங்கிலாந்து எதிர் நியூசிலாந்து | 1975 |
| 130 | ஐ- கவ்வர் | இங்கிலாந்து எதிர் இலங்கை | 1983 |

(16)

★ சுதந்திரக்கட்சி கொள்கைப் பிரகடனம்

# வட, கிழக்குக்கு சுயநிர்ணய உரிமை வழங்க வேண்டும்

"நாட்டின் இறைமை பாதிக்கப்படாத வகையில் சுயநிர்ணய உரிமை வடக்கு கிழக்கு மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்" என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைப் பிரகடனத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கட்சியின் கொள்கைகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட ஒன்பது பேரைக் கொண்ட நடவடிக்கைக் குழு 11 பக்கங்களைக் கொண்ட அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

இவ்வறிக்கை தொடர்பாக ஆராய நடந்த வெள்ளிக்கிழமை கூடிய கட்சியின் மத்திய குழு இதற்கான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

'ஜனநாயக வழியை ஏற்றுக்கொண்டால் விடுதலைப்புலிகளுடன் சுதந்திரக் கட்சி பேச்சுவார்த்தை நடத்தும்' எனவும் அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சுதந்திரக் கட்சியின் கொள்கை எனவும் மத்திய குழுவின் அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

'இந்திய அரசுடன் நெருங்கிய நட்புறவைக் கொண்டிருக்க வேண்டும் என்பது கட்சியின் கொள்கைகளில்ஒன்று' என்றும் அவர் மேலும் கூறினார் என நேற்று கொழும்புச் செய்திகள் கூறின.

## ஒரு விநோத மனிதரும் 500 பாம்புகளும்

புதுடில்லி, கோழிக்கோடு, கல்கத்தா ஆகிய நகரங்களில் 500 பாம்புகளுடன் தங்கி, கண்காட்சி நடத்துகிறார் 42 வயதுப் பேராசிரியர் வேலாயுதம். பல பாம்புகளைக் கழுத்திலும், உடலிலும் மாலை போல் சுற்றிக்கொண்டு காட்சி தருகிறார். அத்தனையும் விஷப் பாம்புகள். பாம்பு கடிக்கும்போது பெரும்பாலும் அந்த அதிர்ச்சியிலேயே இரத்தம் விரைவாக இதயத்துக்குப் போய் மக்கள் இறக்கிறார்கள் என்பது இந்தப் பேராசிரியரின் கணிப்பு!

## சரிசம முடிவு

கல்லூரி கிரிக்கெட் போட்டித் தொடரில் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும், சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் இடம்பெற்ற போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் கல்லூரி அணி 7 விக்கற்றுகள் இழப்பிற்கு 242 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது துடுப்பாட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

சென் பற்றிக்ஸ் அணியினர் தமது துடுப்பாட்டத்தில் 8 விக்கற்றுகள் இழப்பிற்கு பிரசாத் பெற்ற ஓட்டங்கள் உட்பட 194 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டனர்.

மீண்டும் துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் அணியினர் 2 விக்கற்றுகள் இழப்பிற்கு 32 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஆட்டம் நிறைவு பெற்றது. (16)

## விடுதலைப்புலிகளின் பலம்; கொழும்பு நாளிதழ் விமர்சனம்

"பசிலன் மோட்டார்கள் போன்ற நவீனரக பீரங்கிகளையும், அருள் கிரனேட், கிளமோர், ஜொனி கண்ணி வெடி போன்ற பயங்கர ஆயுதங்களையும் புலிகள் இப்போது வைத்திருக்கிறார்கள் என்பது இரகசியமல்ல. இந்த ஆயுதங்களினால் படையினருக்கு பாரதூரமான உயிரிழப்புகளும், சேதங்களும் ஏற்பட்டிருந்தன என்பதும் கவனிக்கத்தக்கது."

இவ்வாறு கொழும்பு நாளிதழ் ஒன்று தனது வாராந்த விமர்சனக் கட்டுரையில் கூறியுள்ளது.

## மெய்வல்லுநர் போட்டி

நல்லூர் தெற்கு ஸ்ரீ கனேஸ்வர வித்தியாலய மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் வித்தியாலய அதிபர் திரு.பொ.நடராசா தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ் வேலாயுதமும் சிறப்பு விருந்தினர்களாக உதவிப் பணிப்பாளர் திரு த.துரைசிங்கம், யாழ் நகரக் கொத்தணி அதிபர் திரு நா.க. சண்முகநாத பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர். (16)

## அதிபர்கள் கூட்டம்

பண்டத்தரிப்புக் கோட்டச் சகலபாடசாலை அதிபர்களுக்குமான கூட்டம் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களும் தவறாது சமூகமளிக்க வேண்டும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. வே. மகேசவேலு தெரிவித்துள்ளார். 20

## தங்கத்தின் விலை குறைகிறது

இந்தியாவில் தங்கத்தின் விலை வெகுவேகமாக சரிந்து வருவதையடுத்து இலங்கையிலும் தங்கத்தின் விலை குறைந்து வருவதாகக் கொழும்புச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

4800 ரூபாவாக இருந்த ஒரு பவுண் 4425 ரூபாவாகக் குறைந்துள்ளதாகவும் இதன் விலை மேலும் குறையலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இச் செய்திகள் கூறின.

## இன்று

மேசன் தொழிலாளர்களுக்கான இளைச்சங்கம் ஒன்று இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது (47)

## சென் அந்தனீஸ் வெற்றி

நல்லூர் தெற்கு சன சமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட 'செற் அப்' முறையிலான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நிலைய மைதானத்தில் இடம்பெற்றபொழுது சென் அந்தனீஸ் அணி அதனை எதிர்த்து ஆடிய காங்கேசன் துறை அணியை கடும் போட்டியின் பின் 15:11. 13:15 15:1. 8:15, 15.10 என்ற புள்ளிகள் அடிப்படையில் 3:2 செற்றுகளாக வென்றது.

இப்போட்டிக்கு நடுவராக எஸ்.கே இராசரெட்டினமும், உதவி நடுவராக கே நாகேந்திரனும் கடமையாற்றினர்.

பிரதம விருந்தினராக வடக்கு கிழக்கு விளையாட்டுத்துறை உதவி அத்தியட்சகரான திரு ஏ.எஸ் குணரெட்டினமும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திரு.எஸ். அண்ணாத்துரை யாழ். கரபந்தாட்ட சம்மேளனத் தலைவர் கப்ரின் டீ ஏ எம்.குணசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர், (16)

## இவரின் நம்பிக்கை

பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நல்ல முடிவு காணும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்று சபாநாயகர் எம் எச்மொஹமட் கூறியுள்ளார்.

'இந்த நம்பிக்கை சகல மக்களுக்கும்ஏற்படவேண்டும். நல்ல முடிவு காணப்படாதவிடத்து அது பல தீமைகளைத் தோற்றுவிக்கும் என்பதனை சகலரும் உணர வேண்டும் என்றும் அவர் சொன்னார்,

தெமட்டகொடையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்,

## நூற்றுக்கும் கூடுதலான உல்லாசப்பயணிகள் பலி

தாய்லாந்தில் ஏற்பட்ட படகு விபத்து ஒன்றில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியாகினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் உல்லாசப்பயணம் செய்தவேளையே இவ் விபரீதம் நிகழ்ந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

## ஒத்துழைக்கக் கோரிக்கை

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினால் 'அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வு' எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதால் 14 ஆம், 15ஆம் திகதிகளில் தனியார் கல்வி நிலையங்களை மூடி இத்தேர்வு சிறப்புற ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## வால் நட்சத்திர வரலாறு; உயிரினம் தோன்றவும்நோய்கள்பரவவும்காரணம்?

வால் நட்சத்திரங்கள் பற்றி சமீபத்தில் பி.பி.ஸி. யில் அளிக்கப்பட்ட விளக்கம் இங்கு தரப்படுகின்றது.

வால் நட்சத்திரங்கள் சூரிய குடும்பத்தைச் சேர்ந்தவை, ஆனால் அவை கிரகங்கள் போல அல்லாததால், மிகவும் நீள்வட்டப் பாதையில் சுற்றுவதால் அவை நீண்ட காலத்திற்கு ஒருமுறை பூமியின் அருகில் வருகின்றன. சூரிய மண்டலம் தோன்றிய காலத்தில் கிரகங்களாக உருவாகாமல் எஞ்சிய சொச்சங்களே வால் நட்சத்திரங்களாகத் தோன்றி உள்ளன,

வால் நட்சத்திரம் தலை, உட்கரு, வால் என மூன்று பகுதிகளை உடையது. உட்கரு நியூக்ளியர் என்பது பனிக்கட்டியாலும், தூசி போன்ற பொருள்களாலும் ஆனது இதைச் சுற்றி வாயு வளையம் போல இருக்கும், அது பல இலட்சம் மைல்கள் பரப்பளவு உடையது. முதலில் வால் நட்சத்திரத்தின் உட்கரு மட்டுமே சூரியனிடமிருந்து வெகு தொலைவில் இருக்கும். அது சூரியனை நெருங்க நெருங்க உட்கருவில் உறைந்து கிடக்கும் பொருள்கள் ஆவியாகி, பின்னர் தலையையும் வாலையும் தோற்றுவிக்கிறது. வால் கோடிக்கணக்கான மைல்கள் நீளமுடையது

வால் நட்சத்திரங்களில் மிகவும் புகழ் பெற்றது ஹாலி, எட்மண் ஹாலி என்ற பிரிட்டிஷ் விஞ்ஞானி இதன் பாதையைக் கணக்கிட்டு 76 ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றும என்று கூறினார். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பிருந்து இரு 76 ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றுகிறது என வரலாற்றுக்குறிப்பில் ஆதாரமுள்ளது.

நாம் வாழும் பூமி இரண்டு முறை வால் நட்சத்திரத்தின் வால் பகுதியைத் துளைத்துக்கொண்டு சென்றிருக்கிறது 1910 ஆம் ஆண்டு ஹாலியின் வால் பகுதியில் சென்றபோது அவ் வால் பகுதி வாயுவால் ஆனதால் சேதம் ஏற்படவில்லை

பூமியில் உயிரினங்கள் தோன்றவும் நோய்கள் பரவவும் வால் நட்சத்திரங்கள் காரணமாக இருக்கும் என அறிஞர்கள் கருதுகிறார்கள் வால் நட்சத்திரங்களில் மிகவும் நீண்ட பாதை உடையது. 1914 ஆம் ஆண்டு தோன்றிய டெலவன் எனும் வால் நட்சத்திரம். இது பூமியின் அருகில் இரண்டரைக் கோடி ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும், வால் நட்சத்திரங்களில் மிகப்பெரியது கிரேட் தாமஸ் என்ற வால் நட்சத்திரம். இதன் நீளம் இருபது கோடி மைல்கள்.

வால் நட்சத்திரங்கள் பல ஆயிரக்கணக்கில் உள்ளன. வானில் தொலைநோக்கி கொண்டு பார்த்தால் எந்நேரமும் குறைந்தது இரண்டு வால் நட்சத்திரங்களையாவது காணலம் வால் நட்சத்திரங்களுக்கு யார் அவற்றை முதன் முதலில் கண்டுபிடிக்கிறார்களோ, அவரது பெயரே இடப்பட்டு வருகிறது.

## தமிழக அரசுமீது இ. கம்யூ. கண்டனத் தீர்மானம்

"தமிழகத்தில் தடா சட்டம் தவறாகப் பயன் படுத்தப்படுகிறது: இதனால் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது"

இவ்வாறு மதுரையில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது

"மாநில அரசு ஜனநாயக இயக்கங்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது தவறானது என்றும் இத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## ஊழல் ஒழிக்கப்படும் ரஷ்ய அதிபர் எச்சரிக்கை

"ரஷ்யாவில் அதிகரித்துக் காணப்படும் ஊழியர்களை ஒழிக்கத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்,"

இவ்வாறு ரஷ்ய ஜனாதிபதி யெல்ட்ஸின் அறிவித்துள்ளார்.

ஊழல்களால் நாட்டு முன்னேற்றம் பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது என்றும் அவர் சொன்னார்,

## சிங்கள நாளிதழ் கூறுகிறது 'நீலப்பறவை'யில் . . .

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் ஏற்றிக்கொண்டு 'புளுபேர்ட்' நீலப் பறவை என்ற கப்பல் லெபனானிலிருந்து மத்திய கிழக்கு ஊடாக இந்தியாவைநோக்கிப் புறப்பட்டிருப்பதாக 'திவயின' இதழ் நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

இது பற்றிய தகவல் கிடைத்ததையடுத்து இந்திய-இலங்கை கடற் பிராந்தியங்களில் ரோந்து நடவடிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வருடாந்த உற்சவம்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

# 3117 மெற்றிக் தொன் பொருள்களுடன்

# வில்லிலில்லி கப்பல் வந்தது

கொழும்பிலிருந்து வந்த வில்லிலில்லி கப்பல் அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் நேற்றுக் காலை 7 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் 1400 மெற்றிக்தொன் அரிசி, 1200மெற்றிக்தொன் மா, 200 மெற்றிக் தொன் சீனி, 100 மெற்றிக்தொன் கௌபி, 82 மெற்றிக்தொன் பருப்பு வகை, 88 மெற்றிக்தொன் பாம்மா, 15மெற்றிக்தொன் தேயிலை, 25 மெற்றிக்தொன் திரிபோஷா, 7 மெற்றிக்தொன் சோப் ஆகியவற்றுடன் இலங்கை வங்கி, யாழ் போதனா வைத்தியசாலை, யாழ் அரசாங்க செயலகம் ஆகியவற்றுக்கு எரிபொருள்களும், இலங்கை வங்கிக்குப் பணம் 294 தபால் பொதிகளுமாக மொத்தம் 3117 மெற்றிக்தொன் பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இக் கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கும் பணி உடனடியாக ஆரம்பமானது (10)

## அரசைக் கலைப்பது இலகுவல்ல - அத்வாணி

# ஜனாதிபதி உரைமீது வாக்கெடுப்பு மத்திய அரசு பிழைத்துக்கொள்ளும்

இந்திய நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதி உரைக்கான நன்றி தெரிவிக்கும் தீர்மான வாக்கெடுப்பில் பிரதமர் பி. வி. நரசிம்மராவின் அரசு தப்பிப் பிழைக்கும் எனத் தெரியவருகிறது.

பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக்கட்சி விலைவாசி உயர்வு. வேலையில்லாத் திண்டாட்டம், கிராமியத் தொழிற்துறை முதலான விடயங்களையிட்டு அரசை எதிர்த்தபோதிலும் தற்போதைய அரசு 5 வருட காலத்துக்கும் பதவியில் இருக்கும் என உறுதியாகத் தெரியவருகிறது

பாரதிய ஜனதாக் கட்சியின் நால்வர் கொண்ட ஒரு குழுவினர் தமது கட்சியுடன் சேர்ந்து அரசுக்கு எதிராக வாக்களிக்க மாட்டார்களென்று அக்குழுவின் தலைவர் அஜித்சிங் தெரிவித்துள்ளார்.

ஊரகத்தொழில்கள், மற்றும் சிறு தொழில்கள் சம்பந்தமான அரசின் கொள்கையில் தமக்கு அதிருப்தி இருந்த போதிலும் அரசைப் பலவீனப்படுத்த முயற்சிப்பது நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்கெடுக்க உதவும் என்று தெரிவித்த அவர் இன்று தமது குழுவினரின் நிலைப்பாடு உறுதி செய்யப்படும் எனக் கூறினார்.

நரசிம்மராவின் அரசைத் தோற்கடிப்பது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல என எதிர்க்கட்சித் தலைவர் எல். கே. அத்வாணி கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவற்றை நோக்கும்போது பாராளுமன்றத்துக்குச் சமுகம் தரும் உறுப்பினர்களின் வாக்களிப்பைப் பொறுத்து அரசின் ஆயுள் நீடிக்கும் என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

### தேசிய...

கள் எவை? என்பதை எல்லாம் அறிவியலடிப்படையில் ஆராய்ந்து - அவற்றுக்கு எதிரான முறையான போராட்டங்களை நடத்துவதன்மூலமே பெண்கள் விடுதலையையும்- தமது உரிமைகளையும் நிலைநாட்ட முடியும்.

காலங்காலமாக பெண்களை ஒடுக்கி வரும் ஆணாதிக்க சக்திகளும், அந்த சக்திகளுக்கு அடங்கிப் போவதையே மரபு எனவும் பண்பாடு எனவும் கொண்டொழுகும் பெண்களின் அறியாமையும் தான் பெண் விடுதலைக்கு பெண் உரிமைக்கு - பெரும் தடையாக உள்ள சக்திகளாகும்.

எத்தகைய ஒடுக்கு முறைகளுக்கு தாம் ஆட்பட்டிருக்கிறோம் என்பதை அறிய முடியாமலிருக்கும் பெண்களின் அறியாமையைப் போக்குவதே பெண்ணுரிமைப் போரின் முதல் இலக்காக கொண்டு பெண் விடுதலை இயக்கங்கள் செயற்பட வேண்டும். அத்தகைய பெண்களின் அறியாமை இருளை அகற்றி சமுதாயத்தின் அரைப்பங்கினரான பெண்களின் சக்தியை விழிப்பும் - எழுச்சியும் கொள்ள வைத்து விட்டால் பெண்விடுதலை என்பது தொலைவில் உள்ள இலக்கல்ல

எனவே இன்று பெண்ணுரிமைக்காக - பெண்விடுதலைக்காக போராடப் புறப்பட்டிருப்பவர்கள் முதலில் அறியாமையிலும் -மூடத்தனத்திலும் மூழ்கி இருக்கும் பெண்களை அவற்றிலிருந்து விடுவிக்கின்ற வகையிலே வேலைத்திட்டங்களை அமைத்துசெயற்படுத்த வேண்டும்.

இத்தகைய அடிப்படையிலேயே தமிழீழப் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களது சமூக வாழ்வை மேம்பாடடையச் செய்வதற்குரிய உருப்படியான செயற்திட்டங்களை தீட்டி-அவற்றை நடைமுறைப்படுத்துகின்ற வகையில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் இந்த மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பெண் விடுதலையை பெண்கள் மேம்பாட்டை இலக்காக வைத்து மாநாட்டை நடத்துவதற்கு உலகிலேயே தகுதி வாய்ந்தவர்களில் முதன்மையானவர்களாக விடுதலைப் புலிகள் மகளிர் அணியினர் இருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது

தமது தாய் மண்ணை மீட்க - தேசிய விடுதலையை வென்றெடுக்க ஆயுதம் ஏந்தி இன்று பல்லாயிரக்கணக்கான தமிழீழப் பெண்கள் களத்தில் குதித்துள்ளார்கள்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக "அச்சம் தான் பெண்களுக்கு அணிகலன்; வீரம் ஆண்களின் தனிச் சொத்து" என்றிருந்த நிலையை, மரபை உடைத்தெறிந்துவிட்டு ஆண்களுக்கு நிகராக ஏன் ஆண்களையே விஞ்சுகின்ற அளவுக்கு களத்திலே தமது வீரத்தை பெண்கள் வெளிப்படுத்தி வருகிறார்கள். தமிழீழ மண் மீட்புப் போரிலே தமிழீழ இளம் பெண்களின் திரளான பங்களிப்பானது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உறுதியைப் போன்ற உறுதியை அளித்துள்ளது

உலகமே வியக்கும் வகையில் ஆற்றல் படைத்த, வீரம் படைத்த எமது பெண்கள் அணியினர், இருளில் மூழ்கியிருக்கும் பெண்களை விழிப்புறச் செய்து அவர்களைத் தட்டி எழுப்பி அணி திரட்டினால் பெண் ஒடுக்குமுறை சக்திகளும் ஆணாதிக்க சக்திகளும் தமிழீழத்தில் எழிதில் அழித்தொழிக்கப்பட்டுவிடும்.

சோவியத் ஒன்றியத்தில் கூட அதன் வெற்றிக்காக உழைத்த பெண்கள், சோவியத் புரட்சியின் வெற்றிக்குப் பின்னர் அரசியல் அடிப்படையில் கூட முழுமையான நிலையை அடையவில்லை. தேசிய விடுதலையுடன் பெண் விடுதலையையும் வென்றெடுப்பதன் மூலமே எதிர் காலத்தில் தேசிய விடுதலையைப் பெறும் அதே நேரத்தில் பெண் விடுதலையையும் பெறமுடியும்.

இன்று தேசிய விடுதலைப் போராட்டத்தில் எழுச்சியுடன் குதித்துள்ள பெண்கள் தேசிய விடுதலையைப் பெற்ற பின் தமிழீழத்தில் மீண்டும் ஒரு முறை பெண்ணொடுக்குமுறைக்கு எதிராகப் போராடுகின்ற நிலை ஏற்பட்டுவிடக் கூடாது. இதற்காகவே எமது தலைவர் எமது தேசிய விடுதலைப் போராட்டத்துடன் பெண்களின் விடுதலையையும் ஒன்றிணைத்து பெண் ஒடுக்குமுறை இல்லாத பெண், ஆண் சமத்துவம் கொண்ட சாதி வேறுபாடு களையப்பட்ட புரட்சிகர சமூக அமைப்பு ஒன்றைப் படைப்பதற்கான முழு விடுதலைக்கான களமமைத்திருக்கிறார்.

எமது தலைவரின் உயரிய இலட்சியத் திலடிப்படையிலே வேணவாவின் அடிப்படையிலே இந்த மாநாட்டை நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். வெறுமனே மாநாட்டை நடத்தி திட்டங்கள் தீட்டி தீர்மானங்கள் போடுவதால் மட்டும் ஒன்றும் விளைந்து விடப்போவதில்லை.

தீட்டப்படுகின்ற திட்டங்களை முழுமையாக முறையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் தான் மாநாடு கூட்டப்பட்டதன் முழுமையான பயனைப்பெறமுடியும்

இந்த மாநாட்டிலே தீட்டப்படும் திட்டங்கள், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அடுத்த ஆண்டு நடத்தப்படும் மாநாட்டிற்கு முன்னதாக நிறைவான முறையிலே முழுமையான முறையிலே நடைமுறைப்படுத்தவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

## ஆர்மீனிய குடியரசின் புதியதிட்டம்

# 50 வயதுக் குட்பட்டோரை இராணுவத்தில் சேர்க்க சட்டம்

ஆர்மீனியாவில் உள்ள ஐம்பது வயதுக்குட்பட்ட அனைத்து ஆண்களையும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதற்கான சட்டமூலம் ஒன்று அக்குடியரசின் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ளது.

நஹறானோ கரபாக் எல்லைப்பகுதி தொடர்பாக முன்னாள் சோவியத் குடியரசுகளான ஆர்மீனியாவும், அசர்பைஜானும் கடந்த 4 வருடங்களாக போர் செய்து வருகின்றன.

அசர்பைஜானிடம் சொந்தமாக இராணுவம் இருந்த போதிலும் ஆர்மினியா கலைந்த முன்னாள் சோவியத்யூனியனின் படைகளையே இதுவரை நம்பியிருந்தது இப்போது அப்படைகளும் அங்கிருந்து வாபஸான நிலையில் ஆர்மீனியா புதிதாக குடிமக்கள் இராணுவத்தை அமைக்க தீவிரமுயற்சியில் ஈடுபட்டுள்ளது

## தெ. ஆபிரிக்கா பாகிஸ்தானை முறியடித்தது

# நியூஸிலாந்து தொடர்ந்து ஐந்தாவது முறையாகவும் வெற்றி

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று ஒக்லாந்தில் நடைபெற்ற போட்டியில் நியூசிலாந்து மேற்கிந்திய தீவுகளை 5 விக்கெட்டுகளால் தோற்கடித்தது

மேற்கிந்திய தீவுகள் 50 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 203 ஓட்டங்களைப் பெற்றது நியூசிலாந்து 48 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 206 ஓட்டங்களைப் பெற்றது நியூசிலாந்து இதுவரை பங்குபற்றிய அனைத்து 5 ஆட்டங்களிலும் வெற்றி பெற்று 10 புள்ளிகளுடன் முன்னணியில் உள்ளது.

பிரிஸ்பெனில் நடைபெற்ற மற்றுமோர் போட்டியில் தென்னாபிரிக்கா பாகிஸ்தானை 20 ஓட்டங்களால் தோற்கடித்தது.

தென்னாபிரிக்கா 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 212 ஓட்டங்களைப் பெற்றது இதைத்தொடர்ந்து மழை பெய்ததினால் பாகிஸ்தானுக்கு 36 ஓவர்களாக்கப்பட்டு வெற்றிபெறுவதற்கான இலக்கும் 194 ஆகக் குறைக்கப்பட்டது

பாகிஸ்தான் 36 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 173 ஓட்டங்களையே பெற்றது

# மகளிர் தின நிகழ்ச்சிகள்

யாழ் குடாநாட்டிலும்நேற்று மகளிர் தினம் பல்வேறு இடங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது

வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம், யாழ்ப்பாணம் பகுதிகளில் பொதுக்கூட்டம் கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன.

07, 47

### பலாலி...

மிக கடினம் என்பதை படை அதிகாரிகள் ஒப்புக் கொள்ளவே செய்கின்றனர் எனவும் பி பி ஸி செய்தியாளர் சுட்டிக்காட்டுகிறார்.

இதேவேளை ஜனாதிபதி பிரேமதாஸா இராணுவ பலம் கொண்டு எதையும் சாதிக்க முடியாது. அப்படி சாதிப்பது நிலையற்றது என உணர்ந்துளார் எனவும் பி. பி. ஸி. குறிப்பிட்டது

ஏபரல் இனப்பிரச்சினைக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது முடிவை வெளியிடவுள்ளதையும் பி. பி. ஸி, சுட்டிக்காட்டியது

### நேற்று...

மோதல் நடைபெற்ற இடத்தில் புலிகள் நடத்திவரும் தேடுதலிலேயே நேற்று இராணுவ சிப்பாயின் சடலமும் ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டன.

இராணுவ சடலத்துடன் மீட்கப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு.

ரி 56-2, மகஸீன் -04, சப்பாத்து 1-சோடி, ஐ எம். ரவைகள் - 930 தண்ணீர் கான் - 01, கிற்பாக்-01

## புல் வளர்ப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் கால் நடை வளர்ப்புக்காக 75 ஏக்கர் நிலத்தில் புல் உற்பத்தியை மேற் கொள்ளும் திட்டம் ஒன்றை யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாய பீட மாணவர்கள் மேற்கொண்டுள்ளார்கள் இதன் முதற்கட்டமாக பல்கலைக்கழக மாணவர்கள் சில ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்கள்,

இத்திட்டத்தினால் கால் நடைவளர்ப்பு அபிவிருத்தியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது அத்துடன் 30 ஏக்கர் நிலத்தில் பழவகைச் செய்கைகளை மேற் கொள்வதற்காகவும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அரச அதிபர் க, பொன்னம்பலம் நில ஒதுக்கீட்டை மேற் கொண்டுள்ளார், 17

## கொக்குவிலில் தற்காலிக அலுவலகம்

வேலணைப் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் இடம் பெயர்ந்து தற்போது தற்காலிகமாகக் கொக்குவில் பிரதேச சபைக்கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. (14)

### சிங்கள...

வசிக்கின்ற.

சிங்களக் குடியேற்றத்திற்கு அரச அதிபர் ஆட்சேபம் தெரிவித்ததாகவும் இது அந்த அமைச்சரினால் அரசின் உயர் மட்டம் வரை கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது 47

### கோண்டாவிலில்.

விடொன்றில் வீழ்ந்த குண்டினால் வீடு தரைமட்டமானதுடன் வீட்டினுள் இருந்த புகையிலைச்சிப்பங்களும் எரிந்து நாசமாகின அத்துடன் 10 கோழிகளும் பலியாகின

குண்டுவீச்சு நிகழ்ந்தபோது தாக்குதலுக்குள்ளான ஓர் வீட்டின் அறையினுள் பாதுகாப்புத்தேடி தஞ்சமடைந்தவர்கள் காயமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பினர்

சேதமடைந்த வீடுகளில் இரண்டு வீடுகள் 1987 இல் இந்திய இராணுவ ஷெல்லினால் சேதமடைந்தவை என்பது குறிப்பிடத்தக்கது

07, 47, 06, 15

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 09-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது